தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986, (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு: 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

(முற்பகல் 10–50)

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(இ) பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்: ''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஈ) பொது விற்பனை வரி (ஐந்தாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1986, (ஆ.இ.)